# ஜப்பான் தூதராலயம்

இல. 20, கிறகறீஸ் வீதி, கொழும்பு 7 ஸ்ரீலங்கா
தொலைபேசி: +94-11-2693831-3, தொலைநகல்: +94-11-2698629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk


## பத்திரிகை அறிக்கை
ஆவணி 30ம் திகதி 2013

## ஜப்பான் ஆதரவளிக்கும் மீள் குடியமர்ந்த மக்களுக்கான ஜப்பானிய அ.சா.நிறுவனமூடான ஒரு வாழ்வாதார மேம்பாட்டு திட்டம்

ñ முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்திரும்பிய மீன்பிடி சமூக மக்களின் சமுதாய மீள்நிர்மாணம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காகப் ஜப்பான் அரசாங்கம் வழங்கியுள்ள அமெரிக்க டொலர் 283,432 (ஏறத்தாள ரூபா. 40 மில்லியன்) உதவி, ஜப்பான்-அ.சா.நி ஒத்துழைப்பு உதவித்திட்டத்தின் கீழ் பாஸிக் நிறுவனத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பாஸிக் நிறுவனமானது 2004 ஆண்டு தொடக்கம் வடமாகாணத்தில் மீள் நிர்மாணம் மற்றும் மேம்பாட்டு (உதவி) நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுவரும் ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஒரு அ.சா.நி.

இந்த திட்டமானது மீள் குடியமர்ந்த மீன்பிடி சமூகத்தினைச் சேர்ந்தவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கானது. இந்த வருட முதல் அரையாண்டுப் பகுதியில், பாஸிக் 18 பொதுக் கிணறுகளை வழங்கியுள்ளது. மீள் திரும்பிய மக்களின் அடிப்படை வாழ்க்கைமுறை உட்கட்டமைப்புகளின் குறைபாட்டிலிருந்து அவர்களை விரைவில் மீட்டெடுக்க இது உதவியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, இந்த திட்டம் சமூக ஒற்றுமையினை மீண்டும் உருவாக்கும் நோக்குடன், மூன்று பொது மண்டபங்களை வாழ்வாதார உதவிகள் மற்றும் மொழிக் கல்வி அதே போன்று பாலர் பாடசாலைகளையும், கொக்குத்தொடுவாய், கருணாடுகேணி, கொக்கிளாய், கரைப்பற்று பி.தே பகுதிகளில் வழங்கவுள்ளது.

உலகளாவிய சமாதானம் மற்றும் சுபீட்சத்திற்கான முன்முயற்சிகளுக்கு வலுவாக ஆதரவளித்து ஜப்பான் தன்னை அர்ப்பணிக்கின்றது எனவே, நாட்டின் வளர்ச்சயினை நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும் வகையில் ஸ்ரீலங்காவின் தேசிய மீள் இணக்கத்தின் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கின்றது. இந்த வகையில், ஜப்பான் சமாதான முன்னெடுப்பிற்கு ஒரு முக்கியமான பங்குதாரராகவும் மற்றும் தன்னுடைய கணிசமான ஆதரவினை வடமாகாணப் பகுதிகளை மீள்நிர்மாணிக்கவும் கட்டியெழுப்பவும், மக்களின் நலன்களுக்கு அதிகளவு முன்னுரிமை கொடுத்து வழங்கி வருகின்றது.

இத் திட்டத்தினைப் பற்றி கருத்துக் கூறுகையில் பாஸிக் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் செல்வி.ஈடோ ''இந்த திட்டமானது மூன்று வருடகால நிகழ்ச்சி திட்டத்தின் முதலாவது வருட திட்டமாகும், மீன் சந்தைக் கட்டிடம், இறங்குதுறை, மற்றும் மீன் வளர்ப்பு வசதிகள் போன்றவற்றினை எதிர்வரும் இரண்டாவது மற்றும் மூன்றாவது வருடங்களில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனக் கூறினார். இந்த திட்டமூடாக மீன்பிடி சமூகங்கள் அவர்களுடைய வலுவினை மீண்டும் பெற்றுக் கொள்ளமுடியுமென நாங்கள் நம்புகின்றோம். 20 வருடங்களுக்கு மேலாக தங்களுடைய இடங்களுக்கு மீண்டும் திரும்பி வந்துள்ள சமூகத்திலுள்ள அனைவரும் உங்களுடைய வாழ்வினைக் கட்டியெழுப்புவதில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பீர்கள் மற்றும் இந்த திட்டம், சமூகத்திலுள்ளோரின் அவ்வாறான விருப்பங்களுக்கு ஆதரவளிக்கும்

இந்த உதவிக்கான ஒப்பந்தம் அதிமேதகு திரு.நொபுஹிட்டோ ஹோபோ - ஜப்பான் தூதுவர் மற்றும் செல்வி..பியூமி ஈடோ ï திட்ட இணைப்பாளர், பாஸிக் அவர்களுக்குமிடையில் 2013ம் ஆண்டு ஆவணி மாதம் 30ம் திகதி கொழும்பிலுள்ள தூதுவருடைய இல்லத்தில் கையொப்பமிடப்பட்டது.

* * *

மேலதிக தகவல்களுக்கு, தயவு செய்து
ஜப்பான் தூதராலய பொருளாதார ஒத்துழைப்புப் பிரிவுடன்
தொடர்பு கொள்ளவும் - Tel: 01-269-3831~3 (ext. 25)